**The number of persons suffering from dengue in the city of Colombo is on the increase.**

Virakesari Monday 08-03-2010

# கொழும்பு நகரில் டெங்கு நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு மத்திய நிருபர்)

கொழும்பு நகரில் டெங்கு நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

கொழும்பு மத்திய பிரதேசம் போன்ற மிகவும் குறைந்த சுகாதார வசதிகள் காணப்படுகின்ற பிரதேசங்களிலேயே டெங்கு நோயின் தாக்கத்திற்கு அதிகளவிலானோர் ஆளாகுவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த இரு மாதங்களில் கொழும்பு நகரில் 484 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை பதியப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 6 பேர் இறந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தலைநகர் கொழும்பில் டெங்குநோயினால் பாதிக்கப்படுவோரில் அதிகளவிலானோர் பாடசாலை மாணவர்கள் ஆவர். இவற்றைக் கருத்திற்கொண்டு, பாடசாலை மட்டத்தில் டெங்குநோய் பற்றிய விழிப்பூட்டும் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புக்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## மாநகர சபை பிரதம வைத்திய அதிகாரி

டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் பொதுமக்களின் ஒத்துழைப்பு போதிய அளவில் கிடைப்பதில்லையெனவும், பொதுமக்கள் வசிக்கும் பிரதேசங்களை சுத்தமாகவும் நுளம்புகள் பெருகாமல் இருப்பதற்கான சூழலை ஏற்படுத்துவதன் மூலமே டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியுமெனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் அறிக்கையின்படி கடந்த 2009 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் 3,872 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டும் அவர்களில் 345 பேர் இறந்துள்ளதாகவும் கடந்த 2 மாதங்களில் 800 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், இவர்களில் 46 பேர் இறந்துள்ளதாகவும் அதிகளவு எண்ணிக்கையானோர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இறந்துள்ளதாகவும் அப்பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.